## செப்டம்பர் - 22

**"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்."**

**- சங் 23 : 6**

இராஜ்யத்திலே நாம் எதிர்ப்பார்க்கிற நன்மையும் கிருபையும் ஏற்கனவே இங்கு ஆரம்பமாகி விட்டது. இவ்விதமாகவே அது உயர்வாக மதிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. தற்காலத்தில் கர்த்தரின் சந்தோஷத்தின் ஒன்றையும் அறியாத யாராயிருந்தாலும், ஆயிர வருஷ ஆட்சியின் காலத்தில் ராஜ்யத்தின் நிர்வாகத்துக்கடியில் அவன் எதுவாகிலும் ஆசீர்வாதங்களையும், சந்தோஷங்களையும் அடைந்தாலும், தெளிவாக ராஜ்யத்தில் கர்த்தருடைய சந்தோஷத்திற்காக ஆயத்தமுள்ளவனாய் இருக்க மாட்டான். அப்படியானால் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்கு சந்தோஷமும், மனமகிழ்ச்சியும் கொடுக்கப்பட்டிருகிறது. இது கர்த்தரை அவர்கள் ஏற்றுக்கொண்டு தங்களையே அவருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிற சம்பந்தமாகவுள்ள ஷண காலவிஷயமல்ல. கர்த்தருடைய இந்த நன்மையும் கிருபையும் கடந்த காலத்தின் தூரமான ஒரு காரியமாகக் கருதிப் பின்னாகப் பார்க்க வேண்டியதில்லை. ஆனால் இந்தக் காலத்துக்குரிய ஒரு காரியமாக அதை அடையாளம் கண்டு கொள்ளவும் உயர்வாக மதிக்கவும் வேண்டும். நாளுக்கு நாள் தேவனுடைய நன்மையும் கிருபையும் தொடருகிறது, இளைப்பாற்றுகிறது, பலப்படுத்துகிறது, ஆசீர்வதிக்கிறது.

**- Z ’03, 413 (R 3268)**

நன்மை இங்கே பிரத்தியோகமாக இல்லாவிட்டாலும் மிகவும் விசேஷமாக நம்முடைய ஆவிக்குரிய சிலாக்கியங்களை குறிக்கிறது. அப்போது கிருபை இங்கே பிரத்தியோகமாக இல்லாவிட்டாலும் மிகவும் விசேஷமாக நம்முடைய மானிட சிலாக்கியங்களைக் குறிக்கிறது. ஆனபோதிலும், தேவனுடைய நன்மையும், கிருபையும் நம்முடைய புது மனதையும், மனுஷிகத்தையும் ஆசீர்வதிக்கிறது. ராஜ்யத்துக்குச் செல்லும் பிரயாணத்தின் ஒரு பாகத்திற்காக அல்ல, ஆனால் முழு பிரயாணத்திற்காகவும் இவைகளை நாம் உடையவர்களாயிருப்பது நம்முடைய மகிமையான சிலாக்கியமாயிருக்கிறது. நம்முடைய முழுபிராயணத்துக்கும் அவசியமாயிருகிற எல்லா கிருபையையும், இரக்கத்தையும், சத்தியத்தையும் நமக்குக் கொடுக்க கர்த்தர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை ஒரு ஷணப்பொழுதாகிலும் நாம் சந்தேகிக்காமல் இருப்போமாக. அவர்ஒருபோதும் சொல் தவறமாட்டார். நம்மை விட்டு பிரியவுமாட்டார். நம்மை கைவிடவுமாட்டார். கடைசி வரை நாம் உண்மையுள்ளவர்களாயிருப்பது நிரூபிக்கப்பட்ட பிறகு தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினராயிருப்பது நம்முடைய நித்திய பங்காய் இருக்கும்.

**- P ’32, 136.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 15:13; 20:6; 33:19; 34:6; 2நாளா 5:13; நெகே 9:17,27-31; சங் 23:1-5; 33:5; 73:1; 103:1-17; யாக் 1:17; யோவா 14:2,3; எபே 2:19-22; 1பேது 2:5.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 109 (R 5437).

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவை எவ்வாறு ஏற்கப்பட்டன? அவை என்னில் என்ன கிரியை செய்தன?